**O.S.No. 29 /2022 நாள் 19.06.2026 PW 1– திரு பெருமாள்**

(சாட்சி மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின்பேரில் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.)

**5 முதல் 7 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னுடைய மனைவியும் 1 முதல் 4 பிரதிவாதிகளும் உடன்பிறந்தவர்கள் என்றால் சரிதான். என் மனைவியின் தகப்பனார் பெயர் இருளாண்டி என்றால் சரிதான். இருளாண்டியின் சொத்துக்களை பொறுத்து தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இருளாண்டியின் மனைவியின் பெயர் தங்கம்மாள் என்றால் சரிதான். தங்கம்மாளுக்கு சொத்துக்கள் உண்டு என்றால் இல்லை. தங்கமாளுக்கு சொத்துக்கள் உண்டு என்றாலும் அதை என் மனைவிக்கு கொடுத்து அதை என் மனைவி விற்பனை செய்துவிட்டார் என்றால் சரியல்ல. குடும்பத்திற்குள் ஏற்பட்ட வாய்மொழி பாகப்பிரிவனையில் தங்கம்மாளின் சொத்துக்கள் என் மனைவிக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. 1 வது தபசில் 1 வது ஐட்ட சொத்து 1 வது பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. 1 வது தபசில் 2 வது ஐட்ட சொத்தில் 1 செண்ட் ரோட்டிற்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மீதி 9 வது செண்ட் மேற்பக்கம் 4 ½ செண்ட் 3 வது பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல.மேறப்டி இடத்தில் கதவு எண் 1/182 என்ற வீடு கட்டி ஜெயசந்திரன் குடியிருந்து வருகிறார் என்றால் அவர் வீடு கட்டி குடியிருந்து வருகிறார் ஆனால் அவரது பெயரில் வரி ரசீது எதுவும் கிடையாது அவர் அப்பா பெயரில் உள்ளதில் அவர் குடியிருந்து வருகிறார். மேற்படி வீட்டின் மின் இணைப்பு ஜெயச்சந்திரன் பெயரில் உள்ளது என்றால் போலியான இணைப்பு பெற்றுள்ளார். மேற்படி 9 செண்ட்ல் கீழப்பக்கம் 4 ½ செண்ட் 4 வது பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியலல.2 வது தபசில் சொத்து உப்பளம் என்றால் சரிதான். அது மாநில அரசுக்கு பாத்தியப்பட்ட சொத்து

என்றால்சரிதான். பல வருடங்களுக்கு முன்பே வாய்மொழி பாகப்பிரிவனை நடந்து விட்டதால் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்படகூடியது என்றால் சரியல்ல. கூட்ட அனுபவம் இல்லாததால் நான் செலுத்திய நீதிமன்ற கட்டணம் தவறானது என்றால் சரியல்ல. நான் தபசில் சொத்தில் ஜெயச்சந்திரன் கதவு எண் 1/182 வீட்டை மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. அதை வழக்கில் காண்பித்தால் வாய்மொழி பாகப்பிரிவனை நடந்தது தெரிந்துவிடும் என்பதால் காண்பிக்கப்படவில்லை என்றால் சரியலல. தங்கம்மாள் சொத்தை வழக்கில் காண்பிக்காததால் வழக்கு பகுதி பாகப்பரிவினை தோசத்திற்கு உட்பட்டுள்ளது என்றால்சரியல்ல. வழக்கு காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் மதிப்பு கூடிவிட்டதால் 1 முதல் 4 பிரதிவாதிகளுடன் கூட்டு சேர்ந்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யப்படகூடியது என்றால் சரியல்ல.